முற்பகல் 10-30

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவச மின்சாரம் வழங்குவதை அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று ஆசிய வளர்ச்சி வங்கி எந்தவித நிபந்தனையையும் விதிக்கவில்லை. ஆனால் 179 என்கின்ற கடன் ஒப்பந்தத்தில் 3-வது அட்டவணையில் 12வது வரைவின்படி தமிழ்நாடு அரசு வருடத்திற்கு இரு முறை காலதாமதம் இன்றி ஒன்று, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வர வேண்டிய விவசாயத்திற்குப் பயன்படும் மின்சாரக் கட்டணத் தொகை மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியம் அதேமாதிரி பயனீட்டாளர்களுக்கு மின்சாரத்தை அடக்கவிலைக்கும் குறைவாக விற்பதால் விழும் துண்டுத் தொகை முழுவதும் ஈடு செய்ய வேண்டுமென்ற நிபந்தனை. இந்த நிபந்தனைகளைத்தான் நம்முடைய ஆசிய வளர்ச்சி வங்கி விதித்திருக்கிறது. இலவச மின்சாரம் வழங்குவதை அரசு மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று எந்தவிதமான நிபந்தனையும் விதிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி.பி. சந்திரசேகர்.

திரு. வி. பி. சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிய வளர்ச்சி வங்கி அப்படி கேட்டுக் கொள்ளாவிட்டாலும், நாட்டினுடைய நிலை கருதியும், நிதி நிலைமை கருதியும் இப்படி இலவச மின்சாரம் வழங்கும்போது விவசாயிகளை தரம் பிரித்து வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவச மின்சாரம் வழங்குகின்ற பிரச்சினைக்கும், இந்தக் கேள்விக்கும் தொடர்பு இல்லை. ஆகவே இதுபற்றித் தனியாகக் கேள்வி போடலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 208, திரு. சி. இராமசுவாமி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

208—

கோமுகி நதியின் தண்ணீரைப் பாசன நிலங்களுக்கு விடுதல்.

*9158—திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோமுகி நதியின் தண்ணீரை, அந்த நதி பாசனம் செய்யும் நிலங்களுக்கு விடாமல் சம்பந்தமில்லாத நிலங்களுக்கு விடப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பாசனம் செய்யும் நிலங்களுக்கு தண்ணீர் விட அரசு ஆவன செய்யுமா?

1993 ஏப்ரல் 1]

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) நீர்ப்பாசன உரிமை பெறாத நிலங்களுக்கு கோமுகி நதியிலிருந்து தண்ணீர் ஏதும் விடப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோமுகி தண்ணீரை, அந்த நதிப் பாசனத்தில் உள்ள நிலங்களுக்கு விடாமல், சம்பந்தமில்லாத வடக்கு நந்தல், கடத்தூர், இலியத்தூர் போன்ற கிராமங்களுக்கு அந்தப் பொறியாளர்கள் தண்ணீரைத் திருப்பி விடுகிறார்கள். அதைத் தடுக்க அமைச்சரவர்கள் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோமுகி அணையின் வாயிலாக ஏறத்தாழ 5000 ஏக்கர் புதிய நிலங்களும், 411 ஏக்கர் ஆயக்கட்டு நேரடிப் பாசனமும், அதைப்போல சிறிய 11 அணைக்கட்டுகள் மூலம் 5296 ஏக்கர் நிலங்கள் பாசன வசதியும் பெறுகின்றன. எக்சிஸ்டிங் ஆயக்கட் என்று சொல்லப்படுகின்ற நிலங்களுக்குத்தான் தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று அரசு ஆணையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே அந்த அரசு ஆணையை மீறி, இதுமாதிரி புகார்கள் அரசுக்கு வருமானால் அது பற்றி நடவடிக்கை எடுக்கலாம். இதுவரையில் அப்படிப்பட்ட புகாரை சட்ட மன்ற உறுப்பினர் என்னிடத்தில் தெரிவிக்கவில்லை. அப்படி யாராவது, அந்த ஆயக்கட்டுகள் தவிர வேறு நிலங்களுக்கு தண்ணீர் விட அரசு அதிகாரிகள் முயற்சித்தால், அது சம்பந்தமாக அரசு கவனத்திற்கு வரும்போது அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த விவரங்களைத் தனியாக என்னிடம் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோமுகி தண்ணீர் எக்சஸ்- ஆக இருந்தால் பாசனம் இல்லாத நிலங்களுக்கு அனுப்பலாம். ஆனால் அங்கே தண்ணீர்ப் பற்றாக்குறை நேரத்தில் பொறியாளர்கள் சம்பந்தப்பட்ட நிலங்களுக்குக் கொடுக்காமல், வேறு நிலங்களுக்குக் கொடுப்பதைத் தடுக்க தீவிர நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். எக்சிஸ்டிங் ஆயக்கட் என்று சொல்லப்படுகிற அந்த நிலங்களைத் தவிர, வேறு யாருக்கும் தண்ணீர் கொடுக்க எந்த அதிகாரிக்கும் உரிமை கிடையாது,

அப்படி ஏதாவது தவறு நடந்தால், அதைச் சுட்டிக்காட்ட வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். இன்றைக்கு தமிழ் நாட்டில் பல்வேறு அணைகள் இருக்கின்றன. அவற்றின் மூலம் நீர்ப்பாசன வசதிகளைத் தந்து கொண்டிருக்கிறோம். இதுபோன்ற புகார்கள் தனிப்பட்ட முறையிலே வருமானால், மாண்புமிகு உறுப்பினர்கள் என்னிடம் தெரிவித்தால், அது பற்றி உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். அப்படிப்பட்டவர்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்க அரசு தயங்காது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 209, திரு. கே. செல்வராஜ், இருக்கையில் இல்லை. திரு. ஓ. எஸ்.அமர்நாத் கேட்கிறார். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

209—

மின்சாரம் தயாரிக்க வாங்கப்படும் நிலக்கரி

*11799—திரு. கே. செல்வராஜ்:

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மின்சாரம் தயாரிக்க வாங்கப்படும் நிலக்கரியை மானியமாக தர வேண்டும் என மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மின்சாரம் தயாரிக்க வாங்கப்படும் நிலக்கரியை மானியமாகத் தரவேண்டும் என மத்திய அரசை வலியுறுத்தி எந்த விதமான கோரிக்கையையும் இந்த அரசு வைக்கவில்லை. ஆனால் நிலக்கரியை ரயில் மூலமும், கடல் மூலமும் அதற்குப், பின்னாலே ரயில் மூலம் கொண்டு வருவதால் ஏற்படும் அதிகச் செலவை மட்டும் ஈடுகட்டுமாறு மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்தி வருகிறது.

முற்பகல் 10-35

திரு. ஓ. எஸ். அமர்நாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் உத்தரவுப்படி தமிழகத்தில் உள்ள ஏழை விவசாயிகளுக்கு இலவச மின்சாரத்தை பொதுப்பணித் துறை வழங்கி வருகிறது. இதனால் அரசுக்கு வருமான இழப்பு ரூ. 800 கோடி ஏற்படுகிறது. இந்த இழப்பைச் சரிக்கட்டுகிற வகையில் விவசாயிகளுக்கு வழங்குகிற மின்சாரம் தயாரிக்கிற நிலக்கரி போன்ற உற்பத்திச் செலவை மானியமாக மத்திய அரசு கொடுக்க வேண்டுமென்று மாநில அரசு வற்புறுத்துமா என அறிய விரும்புகிறேன்.